1310

870

30 AUG 192
MADRAS

கணபதி துணை.

தமிழ்ப் பாட புத்தகம்.

(முதலாவது)

இரண்டாவது வகுப்பிற்கு.

கும்பகோணம் - டவுன்ஹைஸ்கூல்— தமிழ்ப் பண்டிதர்
ஊ. சா. வேங்கடராம ஐயர்
எழுதியது.

சுப்பிரமணியம் & ஸன்,
கும்பகோணம்.

1929.

[விலை அணா மூன்று.

உ

கடவுள் துணை.

தமிழ்ப் பாட புத்தகம்.

(முதலாவது)

இரண்டாவது வகுப்பிற்கு.

கும்பகோணம் டவுன் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்

ஊ. சா. வேங்கடராம ஐயர்

எழுதியது.

தி. கி. சுப்பிரமணியம் அண்டு ஸன்,

கும்பகோணம்.

பதிவு செய்தது.] 1929. [விலை அணா மூன்று.

விண்ணு ளார்தொழு தேத்தும் விளக்கினை
மண்ணு ளார்வினை தீர்க்கும் மருந்தினைப்
பண்ணு ளார்பயி லும்திருக் கோளிலி
அண்ண லார்அடி யேதொழு துய்ம்மினே.

—திருநாவுக்கரசர்.

உ

கடவுள் துணை.

முன்னுரை.

அடியேன் எழுதி வெளியிட்ட மணிபாலர் என்னும் பாலர் வகுப்பிற்கு உரிய தமிழ்ப் பாட புத்தகத்தை உபயோகப்படுத்திய அன்பர் பலர் "அடுத்த வகுப்புக்களுக்கும் பாடபுத்தகங்களை எழுதி வெளியிடவேண்டும்" என்று கூறி உற்சாக மூட்டினர். அஃது 'அடியேன் செய்துவரும் தண்டமிழ்த்தொண்டு தமிழ் நாட்டினர்க்கு ஓரளவிலேனும் பயன் படலாம்' என்ற எண்ணத்தை உறுதிப்படுத்துவதாயது. அதன்பயனாக வெளிவருவதே இந்தத் தமிழ்ப் பாடபுத்தகம். இவ்வரிசையில் வருவன நான்காகும்.

இப் புத்தகம் பால மாணாக்கர்களின் அறிவு வளர்ச்சிக்கு இயற்கை, செயற்கை என்ற இருமுறைகளாலும் துணைசெய்யக்கூடிய மாதிரியில் அமைக்கப்பட்டுள்ளது. மாணவர்களின் பிற்கால வாழ்க்கையிலே பயன்படக் கூடிய பல விஷயங்களைப்பற்றிய பொது அறிவும், பாஷை வளர்ச்சிக்குப் படிக்கும் இவ் வரிசைப் புத்தகங்களைக் கற்பதனாலேயே உண்டாகக்கூடும் என்பது அடியேனது கருத்தாகும்.

இப் புத்தகத்தில் உள்ள பாடங்கள் மாணாக்கர்களால் கற்கப்படுவதுடன் பார்த்தோ, சொல்லுவதெழுதல் என்ற முறைப்படியோ முற்றும் சிலமுறைகளேனும் எழுதப்படுவது பெரும்பயனை விளைப்பதாகும். பாலப் பருவத்திலே எழுதிப் பழகுவது விஷயங்களை மனத்திலே நிலைத்துப் பதியச் செய்வதில் தலைசிறந்தது. பாடல்கள் தோத்திரங்களுக்கும், அருந்தொடர்மொழிகள் மனப்பாடம் செய்வதற்கும் உரியன.

நமது நாட்டுப் பிற்காலச் செல்வங்களாகிய சிறுவர், சிறுமியர்களுக்குத் தமிழ்மொழியைக் கற்பித்தற்கு உதவியாக வெளியிடப்படும் இவ் வரிசைப் புத்தகங்களைப் பயன் படுத்திக்கொள்ளும் முறையில் தண்டமிழ்த்தொண்டு பற்றிய அடியேனது ஊக்கத்தை வளர்த்தருளுமாறு தமிழ்மக்களையும், ஆசிரியன்மார்களையும் வேண்டிக் கொள்கிறேன்.

ஒன்றற்கும் பற்றாத அடியேனைத் தண்டமிழ்த் தொண்டில் அமர்த்தித் திருவருள் பாலித்துவரும் தோன்றாத் துணையாகிய ஆண்டவனை வாழ்த்தி வணங்கி வழிபடுகின்றேன்.

நாராயண விலாசம்,
கும்பகோணம்,
29-11-28.

இங்ஙனம்,
ஊ. சா. வேங்கடராமன்,
தண்டமிழ்த் தொண்டன்.

பொருளடக்கம்.

எண்.	விஷயம்.	பக்கம்.
1.	கணபதி	7.
2—7.	தொடர் மொழிகள்	8—14.
8.	ஜார்ஜ் சக்கரவர்த்தி	15.
9.	இராமாயணம்	16.
10.	திசைகள்	17.
11.	ஆலமரம்	18.
12.	அணில்	19.
13.	செக்கு	20.
14.	ஸரஸ்வதி	21-22.
15.	பசு	23-24.
16.	தென்னை	25-26.
17.	கோழி	27.
18.	கிளி	28-29.
19.	குதிரை	30.
20.	விசுவாசமுள்ள குதிரை	31-32.
21.	குயவன்	33-34.
22.	காக்கை	35.
23.	காக்கையும் நரியும்	36-37.
24.	காக்கையும் குடமும்	38-39.

எண்.	விஷயம்.	பக்கம்.
25.	நாய்	40.
26.	பேராசை உள்ள நாய்	41-42.
27.	நாயின் நல்லறிவு	43-44.
28.	யானை	45-46.
29.	யானையும் துஷ்டப் பையனும்	47-49.
30.	பெற்றோர்க்குக் கீழ்ப்படிதல்	50-51.
31.	இடைப்பையனும் புலியும்	52-53.
32.	ஜார்ஜ் வாஷிங்டன்	54-55.
33.	சிங்கமும் சுண்டெலியும்	56-57.
34.	பள்ளிக்கூடம்	58.
35.	அருந்தொடர் மொழிகள்	59-60.
36.	உலகநீதி	61-62.
37.	ஆத்திசூடி	63-64.

கடவுள் வாழ்த்து.

வேதப் பொருளே சரணம் சரணம்
　　விண்ணோர் பெருமான் சரணம் சரணம்
போதத் திறனே சரணம் சரணம்
　　புனைமா மயிலோய் சரணம் சரணம்
நாதத் தொலியே சரணம் சரணம்
　　நவையில் லவனே சரணம் சரணம்
காதுக் கினிதாம் புகழோய் சரணம்
　　கந்தா சரணம் சரணம் சரணம்

—இராமலிங்க சுவாமி.

தமிழ்ப் பாட புத்தகம்

(முதலாவது)

1. கணபதி.

கணபதி யேசிவ கணபதியே—தினம்
கைதோழு வோர்க்கருள் செய்நிதியே
மணமலர் கோண்டுன் திருவடியை—நிதம்
வழிபடு வோம்எமை வாழ்விப்பாய். (1)
யானைமு கத்துவி நாயகனே—மத
யானை உரித்தவன் முதல்மகனே
மானமு டன்உயிர் வாழ்ந்திடவே—நிதம்
வழிபடு வோம்எமை வாழ்விப்பாய். 2)



2. தொடர் மொழிகள் I.

தமிழ் மொழி.	எண் சுவடி.
பால பாடம்.	நன்றாய் வாசி.
நல்ல பிள்ளை.	உனது புத்தகம்.
கூரை வீடு.	குளிர் காலம்.
குடை நிழல்.	வாழை இலை.
காய் கறி.	எனது ஊர்.
கடை வீதி.	பச்சை நிறம்.
பட்டு நூல்.	குதிரை வண்டி.



3. தொடர்மொழிகள் II.

காலையில் எழு.	கிணற்று நீர்.
மாலையில் நட.	ஊற்று நீர்.
இரவிலே தூங்கு.	காட்டு வழி.
நீரில் முழுகு.	ஆட்டு மந்தை.
நிலத்தை உழு.	உழுது விதை.
கடவுளைவணங்கு.	பாண்டவர்ஐவர்
நான் வந்தேன்.	நாம் வந்தோம்.
நீ தந்தாய்.	நீர் தந்தீர்.
அவன் போனான்.	அவர் போனார்.
அது நின்றது.	அவை நின்றன.
எவன் படித்தான்?	எவர் படித்தார்?
எது தின்றது?	எவை தின்றன ?

4. தொடர் மொழிகள் III.

கடவுள் ஒருவர் இருக்கிறார்.
உண்மை ஒன்றையே பேசு.
கல்வியே அழியாத செல்வம்.
இராமன் நல்ல அரசன்.
உனது புத்தகம் எங்கே?
பாடத்தை நன்றாய் வாசி.
படத்தில் இருப்பது தேர்.
இந்தியா நமது தேசம்.



5. தொடர் மொழிகள் IV.

நான் முன்னே போனேன்.
அவர் பின்னே வந்தார்.
கோபாலன் நாளைக்கு வருவான்.
நீயும் நானும் போவோம்.
அவனும் நீயும் போவீர்.
பறவைகள் பறந்து போகும்.
கரிகாலன் சிறந்த அரசன்.
ஔவை எழுதியது ஆத்திசூடி.
கடவுள் நன்மையையே செய்கிறார்.



6. தொடர் மொழிகள் V.

பசு மிகவும் சாதுவான மிருகம்.
யானை பெரிய மிருகம்.
அதன் சிறந்த உறுப்பு துதிக்கை.
குதிரை அழகான மிருகம்.
படத்தில் இருப்பது கலைமான்.
மான் வேகமாய் ஓடும்.
நரி பிறரை ஏமாற்றும் பிராணி.
கிளி சொல்லியதைச் சொல்லும்.
காக்கை 'கா-கா' எனக் கத்தும்.
கண் உறுப்புக்களிலே சிறந்தது.

7. தொடர் மொழிகள் VI.

இராமன் நாளைக்கு விளையாட வருவான்.

நான் உன்னை அழைக்க வந்தேன்.

நீயும் நானும் அவனும் போனோம்.

கண்ணன் உண்டது தயிரும் வெண்ணெயும்.

பஞ்சை நூற்பேன் பஞ்சம் ஒழியும்.

பட்டு நூலை விற்று வருவேன்.

பகலில் உழைத்து இரவில் உறங்கு.

ஊற்று நீர் உடம்புக்கு நல்லது.

எனக்கு வேண்டாம் கெட்டவன் சிநேகம்.

நான் பிறந்தது இந்த நாட்டில்.

வண்டி மாடு நன்ருய் ஓடும்.

குதிரை வண்டி முன்னே போகும்.

நானும் வந்தேன்; அவனும் போனுன்.

அவனே மிகவும் நல்ல பிள்ளை.

பாண்டியரின் தலை நகரம் மதுரை.

மதுரையிலே ஒரு சங்கம் இருந்தது.

தமிழ் மொழி அங்கே வளர்ந்தது.

தமிழ் மொழி நமது மொழி.

இமய மலை எமது மலை.

கங்கை நதி எங்கள் நதி.

சங்கரன் சடையிலே கங்கை இருக்கிருள்.

பகீரதன் விடாது முயலும் அரசன்.

அவனே கங்கையை அழைத்து வந்தான்.

8. ஜார்ஜ் சக்கரவர்த்தி.

நமது தேசத்தின் பெயர் இந்தியா.
இந்தியாவை ஆள்பவர் ஜார்ஜ் சக்கரவர்த்தி.
இவர் ஜனங்களிடத்தில் பிரியம் உள்ளவர்.
இவர் நீடூழி வாழ்வாராக.

பாட்டு.

வாழ்க வாழ்க வாழ்க வாழ்க வாழ்க வாழ்கவே
வாழ்க நாம் பிறந்த நாடு வாழ்க வாழ்கவே
வாழ்க நமது மன்னர் மன்னர் வாழ்க வாழ்கவே
வாழ்க ஜார்ஜு மகிபர் என்றும் வாழ்க வாழ்கவே.

9. இராமாயணம்.

மேலே இருக்கிற படத்தைப் பார்.

அது ஸ்ரீராமருடைய கலியாணப் படம்.

இராமர் தசரதருடைய குமாரர்.

அவர் பெற்றோரிடத்தில் மரியாதை உள்ளவர்.

அவருடைய சரித்திரம் பெரியது.

அதன் பெயர் இராமாயணம்.

அதை அனேகர் எழுதி இருக்கின்றனர்.

வடமொழியில் எழுதியவர் வால்மீகி முனிவர்.

தமிழில் எழுதியவர் கம்பர்.

ஹிந்தியில் எழுதியவர் துளஸீதாஸர்.

கீர்த்தனங்களாகப் பாடியவர் தியாகராஜர்.

நாடகமாகப் பாடியவர் அருணாசலக் கவிராயர்.

இராமாயணத்தை எல்லோரும் படிக்கவேண்டும்.

அதனால் பல நீதிகளைத் தெரிந்துகொள்ளலாம்.



10. திசைகள்.

நீ சூரியனைப் பார்த்திருக்கிறாயா? சூரியன் எங்கே உதிக்கின்றது? எங்கேபோய் மறைகின்றது? சூரியன் உதிக்கின்ற திசையைப் பார்.

நீ இப்பொழுது பார்க்கும் திசை கிழக்கு. உனது முதுகுப்பக்கம் இருப்பது மேற்கு. வலது கைப்பக்கம் இருப்பது தெற்கு. இடது கைப்பக்கம் இருப்பது வடக்கு.

கிழக்கும் தெற்கும் சேரும் இடம் தென் கிழக்கு. தெற்கும் மேற்கும் சேரும் இடம் தென் மேற்கு. மேற்கும் வடக்கும் சேரும் இடம் வட மேற்கு. வடக்கும் கிழக்கும் சேரும் இடம் வட கிழக்கு. இவையே எட்டுத்திசைகள். பூமியையும் வானத்தையும் சேர்க்கத் திசைகள் பத்தாகும்.



11. ஆலமரம்.

படத்தில் இருப்பது ஓர் ஆலமரம். ஆல மரம் மரங்களில் எல்லாம் பெரியது. ஆலமரத் தின் கிளைகள் படர்ந்து இருக்கும்.

கிளைகளில் இருந்து விழுதுகள் தொங்கு கின்றன. விழுதுகள் பூமிக்குள் இறங்கி மரம் போலத் தோன்றுகின்றன.

ஆலமரத்தின் நிழல் குளிர்ச்சியாகஇருக்கும். அங்கே பலர் தங்கி இருக்கலாம். அதனுலேதான் சாலைகளில் ஆலமரங்கள் வளர்க்கப் படுகின்றன.

ஆலமரத்தின் பழம் சிறியது. விதையோ மிகவும் சிறியது. மிகவும் சிறிய இந்த விதை யில் இருந்து எப்படி இவ்வளவு பெரிய மரம் உண்டாகின்றது? அது கடவுளின் சக்தியால் உண் டாகின்றது. கடவுளின் பெருமையோ அளவிட முடியாதது.



12. அணில்.

இது ஓர் அணிலின் படம். அணில் மரங்களிலும் வீடுகளிலும் இருக்கும். அது கூடுகளையும் கட்டிக்கொள்ளும்.

அணில் சாதுவான பிராணி. அது பழங்களைத் தின்னும்; தானியங்களையும் கொறித்துத் தின்னும்.

அணிலின் வாலில் உரோமம் அடர்ந்து இருக்கும். அதன் பற்கள் கூர்மையானவை. அதன் முதுகில் மூன்றுகோடுகள் இருக்கின்றன.

இராமர் சமுத்திரத்தில் அணை கட்டினார். அணிலும் அதற்கு உதவி செய்ததாம். அதனால் இராமர் அணிலின் முதுகைக் கையால் தடவினராம். அந்த மூன்றுகோடுகளும் அப்பொழுது உண்டாயினவாம். இது அணிலைப்பற்றிய ஒரு கதை.



13. செக்கு.

நீங்கள் செக்கைப் பார்த்திருக்கிறீர்களா? செக்கு ஒருவகை இயந்திரம் ஆகும். செக்கினால் பலவகை எண்ணெய்களை ஆட்டிக் கொள்ளலாம்.

நம்முடைய வீடுகளில் நல்லெண்ணெய் உபயோகப் படுகிறது. அது எள்ளில்இருந்து எடுக்கப்படுவதே.

செக்கின் நடுவிலே ஓர் ஆழமான குழி இருக்கும். அதில் எள்ளைக் கொட்டுவார்கள், கை மரத்தின் கடைசியில் மாடுகளைக் கட்டுவார்கள். அவற்றைச் சுற்றிச்சுற்றி ஓட்டுவார்கள்.

அதனால் செக்கிலே கொட்டியிருக்கும் எள் அரைபடும். அது எண்ணெயாகவும், பிண்ணாக்காகவும் மாறுபடும்.

தேங்காய், நிலக்கடலை முதலியவற்றையும் இப்படி ஆட்டலாம். அவற்றில் இருந்தும் எண்ணெய், பிண்ணாக்குகள் எடுக்கப்படும். இது நமது நாட்டுக் கைத்தொழில்களில் ஒன்று.

14. ஸரஸ்வதி.

ஸரஸ்வதியே வித்தைகளின் தெய்வம். ஸரஸ்வதியின் ஆசனம் வெள்ளைத் தாமரை. ஸரஸ்வதியின் நிறம் படிகம் போன்றது.

மேலே இருப்பது ஸரஸ்வதியின் படம். ஸரஸ்வதிக்கு நான்கு கைகள். ஒரு கையிலே ஜபமாலை இருக்கின்றது. அது படிகமணிகளால்

ஆகியது. மற்ெருரு கையிலே தாமரைப்பூ இருக்கின்றது. மற்ற இரண்டு கைகளிலும் வீணை இருக்கின்றது. புத்தகமும், கிளியும் இருப்பதும் உண்டு.

வாணி, கலைவாணி, கலைமகள் என்பன ஸரஸ்வதியின் வேறு பெயர்கள்.

ஸரஸ்வதியின் அருளைப்பெற்றவர் வித்தைகளிலே சிறந்தவர் ஆவர். அவருக்குக் கல்வியும், அறிவும் பெருகி வளரும். நமக்கும் கல்வியும், அறிவும் பெருகி வளரவேண்டும். நாமும் ஸரஸ்வதியை வணங்குவோம். நமக்கும் ஸரஸ்வதியின் ஆசீர்வாதம் கிடைக்கும். கல்வியும், அறிவும் நிறைந்தவர்களாவோம்.

பாட்டு.

('பித்தா பிறைசூடி' என்பதுபோல.)

வாணீகலை வாணீ உனை
வாழ்த்திப் பணிகின்றேம்
மாணக்கர்கள் உள்ளன் பொடு
மதியே பெற வேண்டி
காணய் எங்கள் குறையை அவை
தம்மைக் கடிந் தகற்றிக்
கோணதறி வொடு கல்வியைக்
கொடுத்தாண்டருள் நீயே.

15. பசு.

இது பசுவின் படம். பசுவின் பக்கத்திலே கன்று நிற்கின்றது. பசு சாதுவான மிருகம். அது கன்று போடும். காளைகளும் பசுக்களின் கன்றுகளே.

பசுக்களுக்கு நான்கு கால்கள் இருக்கின்றன. குளம்புகள் பிளப்பாக இருக்கும். வால் நீளமாக இருக்கும். தலையில் இரண்டு கொம்புகள் உண்டு. கொம்புகள் கூர்மையாய் இருக்கும். முகத்தில் இரண்டு காதுகளும் கண்களும் இருக்கின்றன.

பசு பாலைக் கொடுக்கும். பால் வெண்மை நிறமானது. பால் இனிப்பாக இருக்கும். அது

நல்ல உணவாகும். சிலர் பாலே மாத்திரமே சாப்பிடுகின்றனர். பசுப்பாலே தாய்ப்பால் இல்லாத குழந்தைகளுக்குச் சிறந்த உணவாகும்.

பசுவைக் காத்தல் சிறந்த புண்ணியச்செயல். நீங்கள் 'பசு மடம்' என்று கேட்டிருப்பீர்கள். சிலர் பசு மடத்தைப் பார்த்தும் இருக்கலாம். அப்பசு மடங்கள் தருமசாலைகளே. நமது நாட்டிலே பல பசு மடங்கள் இருக்கின்றன.

பசுவின் உணவுப் பொருள்கள் பல. பசுக்கள் புல், வைக்கோல் முதலியவற்றைத் தின்கின்றன. பருத்திக்கொட்டையை அரைத்து வைப்பார்கள். பசு கஞ்சி, கழுநீர் முதலியவற்றைக் குடிக்கும். இவற்றோடு ஊறிய பிண்ணாக்கும், தவிடும் கலக்கப்படுவதும் உண்டு.

பசுவின் கன்றுகளாகிய காளைகள் ஏர் உழுகின்றன; வண்டிகளை இழுக்கின்றன. இவற்றால் பசுக்கள் விவசாயத்திற்கும், வியாபாரத்துக்கும் உதவி புரிகின்றன.

TB
031(2)
N29
86205

16. தென்னை.

நீங்கள் தென்னை மரத்தைப் பார்த்திருப்பீர்கள். தென்னை, முழுவதும் உபயோகப்படும் மரம். தென்னை மரத்தின் எந்தப் பாகமும் வீணாவதில்லை.

தென்னையில் இருந்து கிடைக்கும் பொருள்கள் பல. அவற்றுள் மிகவும் மேலானது தேங்காய். தேங்காய் கடவுளுக்கு நைவேத்தியப் பொருளாகும். அது இளநீரைத்தரும். தேங்

காய் உணவுப் பொருள்களோடு சேர்ந்து உணவாகும். அது எண்ணெய், பிண்ணாக்குகளைக் கொடுக்கும்.

தேங்காயின் மேலே இருப்பது உரிமட்டை. உரிமட்டைகளை ஊறவைத்துத் தட்டி நார் உரிக்கலாம். நார்களைக்கொண்டு கயிறுகளைத் திரிக்கலாம்.

தென்னை மரத்தின் உச்சியில் இருப்பன ஓலை மட்டைகள். ஓலை மட்டைகளைக் கீற்றுக்களாக முடையலாம். கீற்றுக்கள் வீடுகளின் கூரைகளை மூட உதவும். அவை பந்தல்களுக்கும் உபயோகமாகும். ஓலைகளில் உள்ள ஈர்க்குகள் துடைப்பங்களாகின்றன.

அடி மரம் வீடுகளுக்கு உத்தரம், தூண் முதலியவைகளாக உதவும். பாக்கி இருப்பன அடுப்பு எரிக்க உதவும்.

எல்லாவற்றுலும் பயன்படுகிறதினுல்தென்னை மரத்திற்குப் "பூலோகக் கற்பகவிருக்ஷம்" என்பது ஒரு பெயர். இவ்வளவு சிறந்த தென்னைமரத்தை ஒவ்வொருவரும் நன்ருகப் பயிர் செய்தல் வேண்டும்.



17. கோழி.

கோழி ஒரு பறவை. கோழிக்கு இறகுகள் உண்டு. கோழியின் இறகுகள் பல நிறங்களாக இருக்கும். கோழி உயரமாகப் பறக்காது.

ஆண் கோழியின் பெயர் சேவல். பெண் கோழியின் பெயர் பெட்டை. சேவலுக்குத் தலையிலே கொண்டையும், தொண்டையின் கீழே தாடியும் இருக்கும்.

கோழிகள் தானியங்களை உண்ணும்; தண்ணீரைக் குடிக்கும். பெட்டைக்கோழி முட்டையிடும். முட்டையில் இருந்து குஞ்சுகள் உண்டாகும். சேவல் அதிகாலையிலே கூவும்.



18. கிளி.

மேலே இருப்பது கிளியின் படம். கிளி பறவை வகுப்பைச் சேர்ந்தது. கிளிகள் பலவகையானவை. இது பச்சைக்கிளி. அதன் இறகுகள் பச்சை நிறமானவை.

பச்சைக் கிளியின் மூக்கு செந்நிறமானது. மூக்கு வளைவாக இருக்கின்றது. மூக்கை ஒட்டி இரண்டு கண்கள் இருக்கின்றன. கிளிக்கு இரண்டு கால்கள் உண்டு. கால்களில் விரல்களும், விரல்களில் நகங்களும் இருக்கின்றன. நகங்கள் கூர்மையாய் இருக்கும்.

கிளி இஷ்டப்படி பறந்து வாழக்கூடியது. அது அதிக உயரமாகப் பறக்காது.

கிளிகள் கூடுகளைக் கட்டுவதில்லை. அவை மரப் பொந்துகளில் வாசம் பண்ணும்; உயர்ந்த கட்டடங்களில் உள்ள இடுக்குகளிலும் தங்கி இருக்கும்.

கிளிகளுக்குப் பழங்களைத் தின்பதிலே பிரியம் அதிகம். கிளிகள் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும். அவை கொஞ்சி விளையாடும்.

கிளி அழகானது. அது சொல்லியதையே திருப்பிச் சொல்லக்கூடியது. இவற்றால் சிலர் கிளிகளைப் பிடிக்கின்றனர்; கூடுகளில் அடைத்து வளர்க்கின்றனர். கிளிகளைக் கூட்டிலே அடைப்பது பாபச் செயலாகும்.



19. குதிரை.

நீ குதிரையைப் பார்த்திருக்கிறாயா? படத்தில் இருப்பது குதிரையின் உருவம். குதிரை அழகான மிருகம்.

குதிரையினுடைய கால்கள் உயரமானவை. குளம்புகள் வட்டமாய் இருக்கும்; பிளப்பாக இருக்கமாட்டா. குதிரைக்குக் கொம்புகள் இல்லை. குதிரையின் காதுகள் நிமிர்ந்து நிற்கும். வாலில் மயிர் அடர்ந்திருக்கும்.

குதிரை சவாரிசெய்ய உதவும். அது வேகமாக ஓடக் கூடியது. அது வண்டியையும் இழுத்துச் செல்லும்.

குதிரையின் முதுகிலே போடுவது சேணம். அது சவாரி செய்வோர் உட்காரும் இடம். குதிரையின்வாயிலே பூட்டப்படுவது கடிவாளம். அது குதிரையை அடக்கியாள உதவியாகும்.

புல், கொள், தண்ணீர் முதலியன குதிரையின் உணவாகக் கூடியன. குதிரையின் குரலைக் கனைத்தல் என்பார்கள்.



20. விசுவாசமுள்ள குதிரை.

அரபு தேசத்தில் ஓர் அராபியன் இருந்தான். அவனுக்கு வீடு இல்லை. அவன் ஒரு கூடாரத்தில் இருந்து வந்தான்.

அந்த அராபியன் ஒரு குதிரையை வளர்த்து வந்தான். அது குட்டியாக இருந்தது முதல் அவனிடத்திலேயே வளர்ந்து வந்தது. அவன் அதனை மிகவும் பிரியமாக வளர்த்து வந்தான். அதனால், அவன் அந்தக்குதிரையைப் பெயரைச் சொல்லி அழைப்பான். அப்பொழுது அது எங்கே இருந்தாலும் அவனிடம் ஓடிவரும்.

ஒருநாள் இரவில் அந்தக் கூடாரத்திற்குத் திருடர்கள் வந்தார்கள். அவர்கள் அராபியனைக் கட்டித் தூக்கிக்கொண்டார்கள்; குதிரையையும் ஓட்டிக்கொண்டு போய்விட்டார்கள்.

மறுநாள் இரவில் திருடர்கள் தூங்கிவிட்டார்கள். குதிரை தனது யஜமானனிடம் வந்தது. அவனால் ஒன்றும் செய்ய முடியவில்லை. குதிரையின் கண்களில் நீர் ததும்பியது. அது தனது யஜமானனைக் காப்பாற்ற விரும்பியது.

பாருங்கள் அந்தக் குதிரையின் சாமர்த்தியத்தை! அது தனது யஜமானனுடைய இடுப்பைப்பார்த்தது. அங்கே கயிறு இருப்பதைக் கண்டது. அந்தக் கயிற்றைத் தன்னுடைய பற்களால் கௌவிக்கொண்டது. கட்டப்பட்டுக் கிடக்கும் யஜமானனைத் தூக்கிக்கொண்டு வேகமாக ஓடியது. அவனுடைய கூடாரத்திலே கொண்டு போய்ச் சேர்த்தது. சிறிது நேரத்திற்குள் யஜமானனைத் தூக்கிக் கொண்டுவந்த கஷ்டத்தால் இறந்து போய்விட்டது.

குதிரை ஏன் இறந்தது? தனது யஜமானனை ஆபத்தில் இருந்து காப்பாற்றுவதற்கல்லவா? ஆகையினால், ஒவ்வொருவரும் தங்களுக்கு உதவி செய்தவர்கள் இடத்தில் விசுவாசம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

21. குயவன்.

குயவன் ஒரு தொழிலாளி. ஒவ்வொரு கிராமத்திலும் குயவர்களின் குடும்பங்கள் உண்டு. குயவர்கள் கிராமத் தொழிலாளர்களைச் சேர்ந்தவர்கள். சில கிராமங்களிலே குயவர்களுக்கு மானிய நிலங்களும் உண்டு. மானியம்—இனும்.

குயவர்கள் சட்டிகளையும் பானைகளையும் பண்ணுவார்கள். வேறு பல பாண்டங்களையும் பண்ணுவார்கள். அவை மண்ணினாலே செய்யப்படுவன. இது நமது நாட்டுக் கைத்தொழில்.

குயவர்களின் தொழில் மிகுந்த பிரயாசை யினால் நிறைவேறுவது. அது அதிக ஆச்சரி யப் படத்தக்கதும் ஆகும். பிரயாசை—கஷ்டம்.

குயவர்கள் முதலில் மண்ணை நீரால் நனைப் பார்கள் ; துவைப்பார்கள் ; மைபோலப் பக்குவப் படுத்திக் கொள்வார்கள். பிறகு அவர்கள் அந்த மண்ணைச் சக்கரத்திலே வைப்பார்கள் ; தடியினால் அந்தச் சக்கரத்தைச் சுழற்றுவார்கள்; தாங்கள் விரும்புகின்றபடி உருவங்களாக அமைப்பார்கள்.

இப்படி அமைந்த உருவங்களை அவர்கள் பக்குவமாக உலரவைப்பார்கள். நன்றாக உலர்ந்த பிறகு அந்தப் பாண்டங்களைச் சூளையிலே வைத் துச் சுடுவார்கள். அழகின் பொருட்டு அவற் றின் மேலே காவி முதலியவற்றைப் பூசுவார்கள்.

நம்முடைய வீடுகளில் உள்ள சட்டி, பானை கள் இவ்வளவு பிரயாசையுடன் செய்யப்பட்ட வையே. மண் பாண்டங்களிலே சமைத்து உண் பது உடம்புக்குச் சுகத்தை உண்டாக்கும்.



22. காக்கை.

காக்கை ஒரு பறவை. அது கறுப்பு நிற மானது. காக்கையின் கழுத்து சாம்பல் நிறமாக இருக்கும். காக்கைக்குக் கால்கள் இரண்டு. ஒவ்வொன்றிலும் நான்கு விரல்கள் இருக்கின்றன.

காக்கைக்கு மூக்கு உண்டு. அது மிகவும் அழுத்தமானது. மூக்கே காகத்திற்கு வாயாகும். காகத்திற்குக் கண்கள் இரண்டு. இரண்டு கண்களுக்கும் பொதுவாக ஒரு கண்மணிதான் இருக்கின்றது.

காகம் மரங்களிலே கூடு கட்டிக் கொண்டு வாழும். அது கூட்டம் கூட்டமாக வசிக்கும். காகம் கிடைத்த உணவைத் தான் மாத்திரம் தனித்து உண்ணாது. அது தனது இனத்தைக் கூவி அழைத்துக்கொண்டே உண்ணும்.

காகம் அதிகாலையில் எழுந்திருக்கும்; மாலையிலே குளித்துவிட்டுக் கூட்டை அடையும். காக்கையின் குரலைக் கரைதல் என்பார்கள்.

———



23. காக்கையும் நரியும்.

ஒருநாள் ஒருகாகம் பசியால் வருந்திக் கொண்டிருந்தது. அதனால் அது அங்கும் இங்கும் அலைந்து திரிந்தது. அதற்கு ஆகாரம் கிடைக்கவில்லை.

பசியினால் காகம் மிகவும் களைப்படைந்தது. கடைசியில் அது ஒரு பக்ஷணக்கடைக்கு வந்தது. கடைக்காரன் தூங்கிக்கொண்டிருந்தான். காகம்

ஒரு வடையைக் கொத்தி எடுத்துக்கொண்டது; பறந்துபோய் ஒரு மரத்தின்மேல் உட்கார்ந்தது.

அப்பொழுது ஒரு நரி அங்கே வந்தது. அது காக்கையின் மூக்கிலே வடை இருப்பதைக் கண்டது; அந்த வடையைத் தின்ன ஆசைப் பட்டது; காகத்தை ஏமாற்ற ஓர் உபாயத்தைக் கண்டு பிடித்தது. பிறகு, அது "பக்ஷிகளுக்கு ராணியே, உமது குரல் மிகவும் இனிமையானது. தயைசெய்து சற்றுப் பாடுவீராக" என்று வஞ்சக மாக வேண்டிக் கொண்டது.

பாவம்! நரியின் வஞ்சகச் செயலைக் காகம் அறிந்து கொள்ளவில்லை. அந்தக் கபடமற்ற காக்கை கர்வங்கொண்டது; 'கா-கா' என்று பாடத் தொடங்கிற்று.

காகத்தின் வாயில் இருந்த வடை கீழே விழுந்தது. நரி அந்த வடையைக் கௌவித் தின்றது. காகம் வடையை இழந்தது.

பாருங்கள் காகத்தின் அறிவில்லாத் தன் மையையும், நரியின் வஞ்சகச் செய்கையையும்! ஆகையால் ஒருவரும் வீண் கர்வப்படக்கூடாது. மோசக்காரர்களை நம்பலாகாது.

24. காக்கையும் குடமும்.

ஒரு நாள் ஒரு காக்கை தாகத்தால் வருந்திற்று; நெடுந்தூரம் பறந்தது, பல இடங்களுக்கும் போயிற்று. அதுவோ நல்ல கோடைக் காலம். ஆறுகளும் குளங்களும் வற்றியிருந்தன. அதனால் காகத்திற்குத் தண்ணீர் கிடைக்கவில்லை.

கடைசியில் காகம் ஒரு தோட்டத்திற்கு வந்தது. அது அங்கே ஒரு குடம் இருப்பதைக் கண்டது; அதன் விளிம்பிலே உட்கார்ந்து கவனமாகப் பார்த்தது. குடத்தின் அடியிலே ஜலம்

இருப்பதை அது அறிந்து கொண்டது ; மிகவும் சந்தோஷப்பட்டது.

உடனே, காகம் ஜலத்தை எட்டிக் குடிக்கப் பார்த்தது. ஜலம் அடியில் இருந்தபடியால் காக்கையின் மூக்குக்கு எட்டவில்லை.

காகம் சற்று யோஜனைசெய்து அங்கும் இங்கும் பார்த்தது. அது பக்கத்திலே சிறிய கற்கள் பல இருப்பதைக் கண்டது ; ஒவ்வொன்றாகக் கொத்திக் கொண்டுவந்து குடத்திற்குள் மெதுவாகப் போட்டது.

கற்களைப் போடப் போடத் தண்ணீர் மேலே வந்தது. மூக்குக்குத் தண்ணீர் எட்டுகிற வரையில் காகம் குடத்திற்குள் கற்களைப் போட்டது. தண்ணீர் சமீபத்திற்கு வந்தது. காகம் அந்தத் தண்ணீரைக் குடித்துத் தாகத்தைத் தீர்த்துக் கொண்டது. பாருங்கள் காகம் செய்த யுக்தியை! புத்தி உண்டானால் சித்தி உண்டாகும்.

—



25. நாய்.

நாய் ஒரு சிறிய பிராணி. அது நன்றி யறியும் குணம் உள்ளது. தன்னை வளர்ப்பவரைக் கண்டால் அது வாலை ஆட்டும்.

நாயின் கால்கள் நீளமாகவும், மெல்லியனவாகவும் இருக்கின்றன. அதனால் நாய்கள் வேகமாக ஓடுகின்றன. நாயின் விரல்கள் நெருங்கி இருக்கும். நகங்கள் கூர்மையானவை.

நாய் மோப்பம் பிடிக்கும். நாயை இலகுவில் ஏமாற்றிவிட முடியாது. அது பழக்கியபடியே நடக்கும்.

நாயின் பற்கள் கூர்மையானவை. அவற்றால் அது தனக்குத் துன்பம் செய்பவரைக் கடிக்கும். நாயை வளர்ப்பது நல்ல துணையாகும்.



26. பேராசை உள்ள நாய்.

ஓர் ஊரில் ஒரு நாய் இருந்தது. அதற்கு யஜமானன் இல்லை. ஒருநாள் அது பசியால்வருந்தியது; கடைத்தெருவின் வழியாகப் போயிற்று.

வழியில் ஒரு மாமிசத்துண்டு கிடந்தது. நாய் அதைக் கண்டது; கௌவிக்கொண்டது; வெகுதூரம் ஓடி ஒருவாய்க்கால் இருக்கும் இடத்திற்கு வந்தது.

அந்த வாய்க்காலுக்கு ஒரு மரப்பாலம் உண்டு. நாய் அந்தப் பாலத்தின்மேலே நடந்தது. பாலத்தின் கீழே ஜலம் ஓடிக்கொண்டிருந்தது. ஜலத்

திலே நாயின் நிழல் காணப்பட்டது. மாமிசத் துண்டின் நிழலும் காணப்பட்டது. நாய் அவற்றைப் பார்த்தது; மாமிசத்தைக் கௌவிக்கொண்டிருக்கும் வேறொரு நாய் இருப்பதாக எண்ணிற்று.

பாவம்! நாய் பேராசை கொண்டது. தன் வாயில் உள்ள மாமிசத்தின் நிழலே அது என்பதை அந்த நாய் அறிந்துகொள்ளவில்லை. அந்த மாமிசத்தையும் தின்பதற்கு அது ஆசைப்பட்டது; வாயைத்திறந்தது.

திறந்த வாயிலே கௌவிய பொருள் தங்கியிருக்க முடியுமா? உடனே வாயில் இருந்த மாமிசத்துண்டு கீழே ஓடும் ஜலத்தில் விழுந்தது; மிதந்து போயிற்று. ஜலம் கலங்கிவிட்டபடியால் நிழல்களும் காணப்படவில்லை.

பாருங்கள் பேராசையின் பயனை! நாய் அதிக ஆசைப்பட்டது. அதனால், அது தன்னிடத்தில் இருந்ததையும் இழந்தது. அதிக ஆசை அதிக நஷ்டம்.

---

27. நாயின் நல்லறிவு.

ஒரு பட்டணத்தில் ஒரு மிருக வைத்திய சாலை இருந்தது. அதில் தினம் தினம் மிருகங்களுக்கு வைத்தியம் செய்யப்பட்டு வந்தது.

ஒரு நாய் இதைக் கவனித்துக்கொண்டே வந்தது. ஒரு நாள் அதற்குக் காயம்பட்டது. உடனே, அது அந்த வைத்திய சாலைக்குப் போயிற்று; தனது காயத்தை வைத்தியரிடம் காட்டிற்று. வைத்தியர் அந்தக் காயத்தை ஆற்றினார். அன்று முதல் நாய் வைத்தியரைக் கண்டால் வாலை ஆட்டும்; தனது நன்றியறிவைத் தெரிவித்துக் கொள்ளும்.

இப்படியிருக்கையில் ஒரு நாள் வேறொரு நாய்க்குக் காயம்பட்டது. அது வலியினால் கஷ்டப்பட்டது. முந்தின நாய் அந்த நாய் கஷ்டப் படுவதைப் பார்த்தது. அந்த நாயையும் வைத் தியரிடம் அழைத்துப் போயிற்று; காயத்தைக் காட்டிற்று. வைத்தியர் அந்த நாயின் காயத்தை யும் ஆற்றினார்.

பிள்ளைகளே, பார்த்தீர்களா நாயின் புத்தி சாலித்தனத்தை! நல்ல அறிவுள்ளதாயிருந்த தனால் அந்த நாய் தனது காயத்தையும் ஆற்றிக் கொண்டது; வேறொரு நாயின் காயத்தையும் ஆற்றச் செய்தது.

புத்தியுள்ளவர் தமக்கும் நன்மையைச் செய்து கொள்வார்; பிறருக்கும் நன்மையைச் செய்வார்.



28. யானை.

நீங்கள் யானையைப் பார்த்திருப்பீர்கள். படத்தில் இரண்டு யானைகள் இருக்கின்றன. ஒன்று ஆண் யானை. மற்றொன்று பெண்யானை. யானை காடுகளில் வசிக்கும்.

யானை மிருகங்கள் எல்லாவற்றிலும் பெரியது. யானையின் கண்கள் மிகச் சிறியவை. அதனுடைய காதுகள் முறம்போலவும், கால்கள் உரல்போலவும் இருக்கும்.

யானைக்குத் துதிக்கை என்ற ஓர் உறுப்பு உண்டு. துதிக்கையே யானையின் மூக்காகும். அது நீண்டு கைபோலத் தொங்கும்.

யானைகள் துதிக்கையினாலேதான் உணவுகளை உட்கொள்ளும்; தண்ணீரைக் குடிக்கும்; வேலைகளைச் செய்யும். ஊசி போன்ற மிகச் சிறிய வஸ்துக்களையும் யானைகள் துதிக்கையினால் எடுத்துவிடுகின்றன. துதிக்கை இல்லாவிட்டால் யானைகள் உயிர் வாழமாட்டா.

ஆண் யானைக்குக் கொம்புகள் உண்டு. பெண் யானைக்குக் கொம்புகள் இல்லை. கொம்புகள் இரண்டு கடைவாய்களிலும் முளைத்திருக்கும். அவற்றைத் தந்தம் என்றும் கூறுவார்கள். தந்தம் பல சாமான்களைச் செய்வதற்கு உபயோகப் படும். அது கெட்டியாகவும், வழுவழுப்பாகவும் இருக்கும். தந்தம் வெண்மையானது. அது அதிக விலைபெற்றது.

யானை மிகுந்த பலமுள்ளது. அது மனிதராலே செய்யமுடியாத பலவேலைகளையும் செய்யும்; பெரிய மரங்களையும் வேரோடு பறித்துக் கீழே சாய்க்கும்.

யானை பிறர் செய்த தீமையை மறக்காமல் நினைப்பிலே வைத்துக்கொண்டிருக்கும்; காலம் பார்த்துத் தனக்குத் தீமைசெய்தவருக்குப் பதிலாகத் தீமையைச் செய்யும்.

யானையை நன்றாகப் பழக்கிவிடலாம். பழக்கி விட்டால் அது பிறகு பாகன் சொல்லுகிறபடியே நடக்கும். பாகன்-யானையைச் செலுத்துகிறவன்.

அரிசி, கரும்பு, நாணல் முதலியன யானையின் ஆகாரப் பொருள்கள். தேங்காய், வாழைப் பழம் முதலியவற்றையும் தின்னும்.

ஆண் யானையைக் 'களிறு' என்றும், பெண் யானையைப் 'பிடி' என்றும் கூறுவார்கள். யானையின் சத்தத்தைப் 'பிளிறுதல்' என்பது வழக்கம்.

"யானைவரும் பின்னே மணி ஓசைவரும் முன்னே." "யானை இருந்தாலும் ஆயிரம்பொன்; இறந்தாலும் ஆயிரம்பொன்" என்பன யானையைப்பற்றிய பழமொழிகள்.



29. யானையும் துஷ்டப்பையனும்.

முன்னொருகாலத்திலே தென்னாட்டிலே ஓர் அரசன் இருந்தான். அவன் தனது அரண்மனையிலே ஒரு யானையை வளர்த்து வந்தான். பாகன் அந்த யானையின்மேல் ஏறிக்கொண்டு தினந்தோறும் அதை வீதிகளின் வழியே ஓட்டிக் கொண்டு போவான்; சிற்சில சமயங்களில் ஆற்றுக்கு ஓட்டிக்கொண்டுபோய்த் தண்ணீர் காட்டியும் வருவான். அந்த யானையைக் கண்டால் வழியிலே போகிறவர்கள் வாழைப்பழம், கரும்பு, தேங்காய்

முதலியவற்றைக் கொடுப்பது வழக்கம். யானையும் அவர்கள் கொடுப்பதைச் சந்தோஷத்துடன் துதிக்கையை நீட்டி வாங்கி உண்ணும். யானை அவர்களை ஒன்றும் செய்வதில்லை.

ஒரு துஷ்டப்பையன் இதைப்பார்த்துக் கொண்டே இருந்தான். ஒருநாள் அவனுக்கு ஒரு தேங்காய் கிடைத்தது. அவன் அதை உடைத்து மூடிகளிலுள்ள தேங்காயைக் கீறித் தின்றான்; கொட்டாங்கச்சியிலே சுண்ணாம்பு, கல், முள், மண் முதலியவைகளை வைத்தான்; முழுத்தேங் காய்போலவே செய்து யானைவரும் வழியிலே காத் துக்கொண்டிருந்தான்.

அதுதான் அந்த யானை வருகிற வீதி. வழக் கம்போலவே யானையும் வந்தது. உடனே, அந்தத் துஷ்டப்பையன் தான் வைத்திருந்த தேங்காயை அந்த யானையிடம் கொடுத்தான். யானை அந்தத் தேங்காயை மிகவும் பிரியமாக வாங்கிக்கொண் டது; வாய்க்குள்ளே போட்டுக்கொண்டது.

தேங்காய் வாய்க்குள்ளே போனதும் யானைக் குப் பையனுடைய செய்கை தெரிந்துவிட்டது. அதற்குள் அந்தப் பையனும் ஓடிவிட்டான். யானை கோபத்தை வெளியிலே காட்டவில்லை. அது அந்தத் தேங்காயை வாய்க்குள்ளேயே அடக்கி வைத்துக்கொண்டது. அன்று முதல்

அந்தப் பையன் யானையைக் கண்டால் ஓடி ஒளிந்து கொள்வான்.

இப்படிச் சில வருஷங்கள் ஆயின. அப்பால், ஒருநாள் அரசரின் பிறந்த நாள் கொண்டாட்டம் நடந்தது. பலர் ஊர்வலமாக வந்து கொண்டிருந்தனர் அந்த யானை முன்னே போய்க்கொண்டிருந்தது. சிறுவர்கள் கூட்டமாக வேடிக்கை பார்க்க வந்திருந்தார்கள்.

அவர்களோடு அந்தத் துஷ்டப்பையனும் வந்திருந்தான்; தான் முன்பு செய்த கெட்டசெய்கையை யானை மறந்திருக்கும் என்று எண்ணினான். யானையால் தன்னை அடையாளம் கண்டு பிடிக்க முடியாது என்றும் அவன் நினைத்தான்; அதன் சமீபமாகப் போனான்.

யானை எப்படியோ அவனைக்கண்டு கொண்டு விட்டது. அது தனது வாய்க்குள் வைத்திருந்த அந்தத்தேங்காயை எடுத்து அந்தப்பையன் மேல் வேகமாக வீசி எறிந்தது. அதனால் அவனுக்குப் பலமான காயம் உண்டாகியது. அவன் பலநாட்கள் வரையில் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தான். இதைப்பார்த்து ஒவ்வொருவரும் ஆச்சரியப்பட்டார்கள்.

நன்மையைச் செய்தவர் இன்பத்தை அடைவர். தீமையைச் செய்தவர் துன்பத்தை அடைவர். ஆதலால் நாம் ஒருவருக்கும் தீங்கு செய்யலாகாது.

---

30. பெற்றோர்க்குக் கீழ்ப்படிதல்.

அயோத்தி ஒரு பட்டணம். அதன் அரசர் தசரதர். அவருக்கு மூன்றுமனைவிகள் இருந்தார்கள். மூத்தமனைவி கௌஸலை. இரண்டாவது மனைவி சுமித்திரை. மூன்றாவது மனைவி கைகேயி.

கௌஸலையின் குமாரர் இராமர். கைகேயியின் புத்திரன் பரதன். சுமித்திரையின் பிள்ளைகள் இலக்ஷ்மணனும் சத்ருக்னனும். இராமரும் இலக்ஷ்மணரும் எப்பொழுதும் சேர்ந்தே இருப்பார்கள். அப்படியே பரதனும் சத்ருக்னனும் சேர்ந்திருப்பார்கள்.

தசரதர் இராமருக்குப் பட்டங்கட்ட எண்ணி ஞர். நல்ல நாளும் வைக்கப்பட்டது. பலருக்கும் அந்தச் செய்தி தெரிந்தது. அப்படியே கைகேயிக்கும் அது தெரிந்தது. கைகேயி "பரதனுக்கே பட்டங்கட்டவேண்டும்" என்று தசரதரிடம் வேண்டிக் கொண்டாள்.

தசரதர் "இராமன் மூத்தவன். அவன்தான் இராஜா ஆகவேண்டும். பரதன் இராஜாவாவது நியாயமாகாது" என்று சொன்ஞர். கைகேயி "பரதனே இராஜாவாகவேண்டும்; இராமன் இராஜாவாகக் கூடாது" என்று மறுத்துக் கூறிஞள்.

தசரதர் ஒன்றும் சொல்ல முடியாமல் மயங்கி விழுந்தார். கைகேயி இராமரை அழைத்தாள்; "இராமா, நீ காட்டுக்குப்போ. அங்கே பதிஞன்கு வருஷங்கள் இரு. பரதன் இராஜ்யத்தை ஆளட்டும்" என்ருள்.

இராமர் தலைவணங்கிக் கேட்டுக்கொண்டார்; போவதாக ஒப்புக்கொண்டார்; தமது தாயாராகிய கௌஸலாதேவியிடம் சென்ருர்; தாயாரிடம் உத்தரவுபெற்றுக் காட்டிற்குப் புறப்பட்டார்.

இராமரின் மனைவி சீதாதேவி. அவரும் கூடப் புறப்பட்டார். எப்பொழுதும் சேர்ந்தே இருந்த இலக்ஷ்மணர் தங்கியிருப்பரோ? அவரும் கூடப்புறப்பட்டார். மூவரும் காட்டிற்குச் சென்றனர். ஏன் சென்ருர்கள்? பெற்ருேர்களின் வார்த்தைக்குக் கீழ்ப்படியவே சென்ருர்கள்.

ஆகையால், நாமும் பெற்ருேர்களின் சொற்படி நடக்கவேண்டும்.

31. இடைப்பையனும் புலியும்.

பாண்டி நாட்டிலே புலியூர் என்றஓர் ஊர் இருந்தது. அந்த ஊரிலே கோவிந்தன் என்ற ஓர் இடைப்பையன்இருந்தான். அவன் கெட்டகுணங் கள் நிறைந்தவன் ; எப்பொழுதும் பொய்யையே பேசிப் பழகியவன் ; பிறரை ஏமாற்றுபவன்.

அவன் தினந்தோறும் ஆடுகளை மேய்த்து வருவான். தன்னுடைய வழக்கம் போலவே அவன் ஒரு நாள் ஆடுகளை மேய்த்துக்கொண்டி ருந்தான். விளையாட்டுக்காகப் "புலி வருகிறது— புலி வருகிறது" என்று கத்தினான்.

பக்கத்திலே சிலர் உழுது கொண்டிருந்தனர். அவர்கள் இந்தச் சத்தத்தைக்கேட்டு ஓடிவந்தார்

கள். புலியைக் காணவில்லை. இந்த இடைப் பையன் அவர்களைப் பார்த்துக் கைகொட்டிச் சிரித்தான். அவர்கள் திரும்பிப் போய்விட்டார்கள்.

கொஞ்ச நேரம் சென்றது. மறுபடியும் கோவிந்தன் "புலி வருகிறது—புலி வருகிறது" என்று கூவினான். ஆனால், உண்மையிலே புலி வரவில்லை. அப்பொழுதும் அந்த உழவர்கள் ஓடிவந்தார்கள். கோவிந்தன் முன்போலவே அவர்களைப் பார்த்துச் சிரித்தான். அவர்கள் கோவிந்தனை வைதுவிட்டுச் சென்றார்கள்.

இப்படியாகப் பொழுதுபோகும் சமயம் வந்தது. உண்மையாகவே புலி வந்தது. கோவிந்தன் பார்த்து நடுநடுங்கினான்; "புலி வருகிறது—புலி வருகிறது" என்று அலறினான்.

முன்னம் இரண்டு முறைகளில் ஏமாறிய உழவர்கள் கோவிந்தன் வார்த்தையை நம்பவில்லை; "பொய்யாக அலறுகிறான்" என்று அலக்ஷியமாக இருந்துவிட்டார்கள். ஒருவரும் அவனிடம் வரவில்லை.

புலி கொடுமையான மிருகமல்லவா? வந்த புலி சும்மாப்போகுமா? உடனே அது கோவிந்தன் மேலே பாய்ந்து கொன்றது; அப்படியே சில ஆடுகளையும் கொன்றது.

பாருங்கள் கோவிந்தனது நிலைமையை! பொய் சொல்லியதனால் கோவிந்தன் இறந்து போனான். ஆகையால் விளையாட்டாகவும் நாம் பொய் சொல்லக்கூடாது.

32. ஜார்ஜ் வாஷிங்டன்.

உலகத்திலே அமெரிக்கா என்பது ஒருபகுதி. அதில் ஐக்கிய நாடு என்பது ஒருதேசம். அந்தத் தேசத்தில் ஒரு பிரபு இருந்தார். அவருடைய பிள்ளையின் பெயர் ஜார்ஜ் வாஷிங்டன்.

வாஷிங்டனுக்கு ஆறுவயதாயிற்று. அவனுக்கு ஒருகத்தி கிடைத்தது. வாஷிங்டன் கத்தியைப் பிரீத்தான். அது கூர்மையாகவும், பளபளப்பாகவும் இருந்தது. அதனால் வெட்டிப் பார்க்க ஆசைப்பட்டான்.

வாஷிங்டன் தோட்டத்திற்குப் போனான். அங்கே ஓர் அழகான ரோஜாச்செடி இருந்தது.

அது அவனுடைய தகப்பனாராலே வளர்க்கப் பட்டது. வாஷிங்டன் அந்தச் செடியை வெட்டி னான்.

வாஷிங்டனுடைய தந்தையார் தோட்டத்திற் குப் போனார்; ரோஜாச்செடி வெட்டப்பட்டிருப் பதைப் பார்த்தார்; "ரோஜாச்செடியை வெட்டி யவர் யாவர்?" என்று கேட்டார்.

தோட்டக்காரன் "நான் வெட்டவில்லை" என்று கூறினான். வாஷிங்டனைக் கேட்டார். தகப்பனார் கோபத்துடன் இருப்பது அவனுக்குத் தெரியும். ஆனாலும், அவன் நடந்ததைக்கூறப் பயப்படவில்லை. "தந்தையே, நானே அந்தச் செடியை வெட்டினேன். அதன் பொருட்டு என்னை மன்னிக்கவேண்டும்" என்று ஒளிக்காமல் உண்மையைக் கூறினான்.

கேட்ட தந்தையார் சந்தோஷப்பட்டார். வாஷிங்டனைக் கோபிக்கவில்லை. "குழந்தாய், நீ உண்மையைச் சொன்னாய். உன்னை மன்னித் தேன். இப்படியே நீ எப்பொழுதும் உண்மை யையே பேசவேண்டும்" என்று கூறினார்.

அன்று முதல் வாஷிங்டன் உண்மையையே பேசிவந்தான். ஒரு காலத்தில் அவன், தான் பிறந்த தேசத்திற்குத் தலைவன் ஆனான்.

எதனால் வாஷிங்டனுக்கு இவ்வளவு பெரு மை வந்தது? உண்மை பேசியதனாலேயே வாஷிங்டன் பெருமையை அடைந்தான். பிள்ளை களே, உண்மையையே பேசுங்கள். பெருமையை அடைவீர்கள்.



33. சிங்கமும் சுண்டெலியும்.

தென்னாட்டிலே ஒரு காடு இருந்தது. அந்தக் காட்டிலே ஒரு சிங்கம் வசித்துவந்தது. ஒருநாள் அது நன்றாகத் தூங்கிக்கொண்டிருந்தது. அப்பொழுது சுண்டெலி ஒன்று அதன்மேல் ஓடிற்று. அதனால் சிங்கத்தின் தூக்கம் கலைந்தது.

சிங்கம் விழித்து எழுந்தது; கோபங்கொண்டு சுண்டெலியைப் பிடித்துக்கொண்டது; அதை நசுக்கப்போயிற்று. பார்த்த சுண்டெலி நடுங்கி ஒடுங்கி நின்றது; "ஐயா, மிருகராஜனே, நான் ஒரு சிறிய பிராணி. என்னை மன்னியுங்கள். கொல்லாமல் உயிருடன் விட்டுவிடுங்கள். நானும்

உங்களுக்கு உதவிபுரிவேன்" என்று கூறிற்று. சிங்கம் இரக்கங்கொண்டு சுண்டெலியை விட்டு விட்டது; 'சிறிய சுண்டெலியா நமக்கு உதவியைச் செய்யப்போகிறது?' என்று பரிகாசமும் செய்தது. சுண்டெலி தனது வளைக்கு ஓடிப் போயிற்று.

அந்தக் காட்டிலே பல வேடர்கள் வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் வலைகளைக்கட்டி மிருகங்களைப் பிடிப்பது வழக்கம். ஒரு நாள் வேடர்கள் வழக்கம் போல வலைகளைக் கட்டி வைத்தார்கள். இந்தச் சிங்கம் வலையில் அகப்பட்டுக்கொண்டது; தப்பி ஓட முயன்றது. அதனால் முடியவில்லை. அது கர்ஜனை செய்தது.

சுண்டெலி அந்தக் கர்ஜனையைக் கேட்டது; அது தன்னைக் கொல்லாமல் உயிருடன்விட்ட சிங்கத்தின் கர்ஜனை என்பதைத் தெரிந்து கொண்டது. உடனே, சுண்டெலி சிங்கத்தினிடம் ஓடி வந்தது; வலையிலுள்ள கயிறுகளைக் கடித்தது; வலையைக் கிழித்துச் சிங்கத்தை விடுவித்தது. சிங்கம் உயிர்பிழைத்தது.

பாருங்கள்! மிகச் சிறிய சுண்டெலியும் பெரிய சிங்கத்தின் உயிரைக் காப்பாற்றியது. அற்பம் என்று ஒன்றையும் அலட்சியஞ் செய்யலாகாது. சமயம் வந்தால் சிறிய பிராணியும் பெரிய உதவிகளைச் செய்யக்கூடும். சிறு துரும்பும் பல்லுக்குத்த உதவும். அற்பம் அற்பம் அன்று.

34. பள்ளிக்கூடம்.

(சம்பாஷணை.)

இராமன்.—மாமா, அண்ணா எங்கே போகிறான் ?

மாமா:—குழந்தாய், அண்ணா பள்ளிக்கூடத்திற்குப் போகிறான்.

இராமன்;—மாமா, பள்ளிக்கூடம் என்றால் என்ன?

மாமா:—குழந்தாய், பள்ளிக்கூடம் என்பது படிப்புச் சொல்லிக்கொடுக்கும் இடம்.

இராமன்:—மாமா, யார் சொல்லிக்கொடுப்பார் ?

மாமா:—குழந்தாய், உபாத்தியாயர் சொல்லிக்கொடுப்பார்.

இராமன்,—மாமா, அண்ணா கையில் இருப்பன என்ன ?

மாமா:—குழந்தாய், அவன் கையில் இருப்பன புத்தகங்கள்.

இராமன்:—மாமா, அண்ணா பலகைபோலக் கறுப்பாக ஒன்றைவைத்துக்கொண்டிருக்கிறானே, அதன்பெயர் என்ன ?

மாமா:—குழந்தாய், அது கற்பலகை; 'ஸ்லேட்' என்றும் சொல்வார்கள்.

இராமன்:—மாமா, எனக்கும் அவைவேண்டும். நானும் பள்ளிக்கூடத்திற்குப் போவேன்.

மாமா:—குழந்தாய், வருகிற விஜயதசமியிலே உன்னைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்ப நல்ல நாள் பார்த்திருக்கிறது. அன்றுமுதல் நீயும் போகலாம்.

35. அருந்தொடர் மொழிகள்.

காலையில் எழுந்து கடவுளை வணங்கு.
நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.
ஒன்றே செய்யினும் நன்றே செய்.
நன்றே செய்யினும் இன்றே செய்.
ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது.
கந்தையே ஆயினும் கசக்கிக் கட்டு.
கூழே ஆயினும் குளித்துக் குடி.
மருந்தே ஆயினும் விருந்தோடு உண்.

ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி.

புலி பசித்தால் புல்லைத் தின்னாது.

முயற்சி உடையோர் இகழ்ச்சி அடையார்.

உப்பு இட்டவரை உள்ளளவும் நினை.

அதிக ஆசை அதிக நஷ்டம்.

மனக் கவலை பலக் குறைவு.

அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் விஷம்.

அகல உழுவதில் ஆழ உழு.

மேழிச் செல்வம் கோழை படாது.

நன்றியை மறத்தல் நல்ல தாகாது.

தீமையை மறத்தல் சிறந்ததாகும்.

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.

எழுத்தறி வித்தவன் இறைவன் ஆகும்.

காலை மாலை நூலை ஓது.

சிறு துரும்பும் பல்லுக்குத்த உதவும்.

சிறியோர் எல்லாம் சிறியரும் அல்லர்.

உருவத்தைக் கண்டு ஒருவரையும் இகழாதே.

சிறிய வாமனரே பெரியவர் ஆனார்.

36. உலக நீதி.

(ஔவையார்.) *

ஊலக நீதி புராணத்தை உரைக்கவே
கலைகளாய் வரும் கரிமுகன் காப்பு.

ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்.
ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்.
கருதாமல் கருமங்கள் முடிக்க வேண்டாம்.
கற்றவரை ஒருநாளும் பழிக்க வேண்டாம்.
குற்றம் ஒன்றும் பாராட்டித் திரியவேண்டாம்.
சினந்தேடி அல்லலையும் தேடவேண்டாம்.
செய்த நன்றி ஒருநாளும் மறக்க வேண்டாம்.
தனந்தேடி உண்ணாமல் புதைக்க வேண்டாம்.
தெய்வத்தை ஒருநாளும் மறக்கவேண்டாம்.
நஞ்சுடனே ஒருநாளும் பழக வேண்டாம்.
நல்லிணக்கம் இல்லாரோ டிணங்க வேண்டாம்.
நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்.
பொருவார்தம் போர்க்களத்தில் போகவேண்டாம்.
போகாத இடந்தனிலே போக வேண்டாம்.
மனம்போன போக்கெல்லாம் போகவேண்டாம்.

---

* ‘உலகநாதர்’ என்ற ஒரு பெரியவர் இதனை இயற்றியிருத்தல்வேண்டும் என்பது பாட்டின் இறுதியுரையால் அறியப்படுகிறது. நடையின் போக்கை நோக்கினாலும் ஔவையார் வாக்காகக் காணப்படவில்லை. எனினும், வழக்கு நோக்கி இங்ஙனம் ‘ஔவையார்’ எனக் குறிக்கலாயிற்று. இஃது ஆராயற்பாலது.

மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம்
மாற்ருனை உறவென்று நம்ப வேண்டாம். [டாம்.
மூத்தோர்சொல் வார்த்தைதன்னை மறக்கவேண்
வஞ்சனைகள் செய்வாரோ டிணங்க வேண்டாம்.
வாதாடி வழக்கழிவு செய்ய வேண்டாம்.

37. ஆத்திசூடி.

(ஔவையார்)

ஆத்திசூடி அமர்ந்த தேவனை
ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே.

அறஞ் செய விரும்பு.
ஆறுவது சினம்.
இயல்வது கரவேல்.
ஈவது விலக்கேல்.
உடையது விளம்பேல்.
ஊக்கமது கைவிடேல்.
எண்ணெழுத் திகழேல்.
ஏற்ப திகழ்ச்சி.
ஐய மிட்டுண்.
ஒப்புர வொழுகு.
ஓதுவ தொழியேல்.
ஔவியம் பேசேல்.
அஃகஞ் சுருக்கேல்.
கண்டொன் று சொல்லேல்.
ஙயம்பட வுரை.
இணக்கமறிந் திணங்கு.
தந்தை தாய்ப் பேண்.
நன்றி மறவேல்.
இயல்பலாதன செயேல்.

வஞ்சகம் பேசேல்.

கூடிப் பிரியேல்.

கெடுப்ப தொழி.

செய்வன திருந்தச்செய்.

சொற் சோர்வு படேல்.

தூக்கி வினைசெய்.

தொன்மை மறவேல்.

வல்லமை பேசேல்.

வாதுமுற் கூறேல்.

நலன்.

8620·5

PRINTED AT THE B. N. PRESS, MOUNT ROAD, MADRAS.

OUR OWN PUBLICATIONS.

Moral, Religious and Patriotic Instruction Series.

Fully Illustrated.	Rs.	A.	P.
*மஹான்களின் சரிதம்—மலர் I	0	2	6
*மஹான்களின் சரிதம்—மலர் II	0	3	0
*மஹான்களின் சரிதம்—மலர் III	0	4	0
*மஹான்களின் சரிதம்—மலர் IV	0	6	0
*மஹான்களின் சரிதம்—மலர் V	0	7	0
மஹான்களின் சரிதம்—மலர் VI (In the Press)			
தசாவதாரம் (10 படங்களுடன்)	0	8	0
உலகநீதி—நீதிபோதக் கதைகள்	0	2	0
ஆத்திசூடி—நீதிபோதக் கதைகள்	0	2	6
*லீலாவதி கணித வாய்பாடு	0	1	0
*மணி பாலர் 1-வது வகுப்பு- (77 அழகிய படங்கள் அடங்கியது.)	0	2	6
தமிழ்ப்பாட புத்தகம் 1-2-வது வகுப்பு	0	3	0
* ௸ V — I Form	0	6	0
* ௸ VI — II Form	0	7	0
* ௸ VII — III Form	0	9	0

* இக்குறியிட்டவைகள் சென்னைத் துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பட்டவை.

T. K. SUBRAMANIAM & SON,
Educational Publishers,
Dabir West Street,
KUMBAKONAM